Register Number | | | | | |

**Part III**

# அரசியல் அறிவியல் / POLITICAL SCIENCE

( New syllabus )

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 20 × 1 = 20 )

*குறிப்பு :* i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

I. *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவும் :*

1. மக்கள் நல அரசு குறித்த சிந்தனை முதன் முதலில் .......................... நாட்டில் வேரூன்றியது.

   அ) இந்தியா ஆ) இங்கிலாந்து

   இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்கா.

2. திருச்சபையின் ஆதிக்கத்திற்கு வலு சேர்த்த அரசு முறை ............................ .

   அ) மக்கள் நல அரசு ஆ) நகர அரசு

   இ) நிலப் பிரபுத்துவ அரசு ஈ) தேசிய அரசு.

3. இயற்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டிய கொள்கை .............................. .

   அ) தெய்வீகக் கொள்கை ஆ) வலிமைக் கொள்கை

   இ) தாய்வழிக் கொள்கை ஈ) சமுதாய ஒப்பந்தக் கொள்கை.

[ Turn over

4. பின் வருபவர்களில் சமுதாய ஒப்பந்தக் கொள்கையை அளிக்காதவர் யார் ?

அ) ரூஸோ ஆ) லாக்

இ) ஹாப்ஸ் ஈ) சர் ஹென்ரி மெயின்.

5. 'அரசியல் அறிவியல்' என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார் ?

அ) அரிஸ்டாட்டில் ஆ) பிளேட்டோ

இ) ஜீன் போடின் ஈ) ஆடம்ஸ்மித்.

6. நிலைத்த தன்மையுடைய ஆளுமையை உருவாக்கத் தேவைப்படுவது ........................

அ) நியமத்தன்மை ஆ) அதிகாரம்

இ) குடும்பம் ஈ) அரசாங்கம்.

7. உலகமயமாக்கப்படல் ............................. ஒருங்கிணைப்பை முக்கியமாக வலியுறுத்தயது

அ) பொருளாதார ஆ) அரசியல்

இ) சமூக ஈ) இவையனைத்தும்.

8. 'இந்தியக் கலாச்சாரம்' மிகவும் பலம் வாய்ந்தது எனக் கூறியவர்

அ) ஹட்டிங்டன் ஆ) அமர்தியா சென்

இ) காரல் மார்க்ஸ் ஈ) ஜென்க்ஸ்.

9. பின்வரும் நாடுகளில் எது தலைவர்முறை அரசாங்கத்தைப் பின்பற்றுகிறது ?

அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து

இ) இந்தியா ஈ) பிரான்ஸ்.

10. 'கேமிரா' என்ற இலத்தீன் சொல்லின் பொருள் ............................

அ) வீடு
ஆ) கட்டிடம்
இ) அமைப்பு
ஈ) படம்.

11. நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை .......................... நாட்டில் பின்பற்றப்பட்டது

அ) இந்தியா
ஆ) பிரான்ஸ்
இ) இங்கிலாந்து
ஈ) ஜப்பான்.

12. 'அதிகார பிரிவினை' கொள்கையை வெளியிட்டவர் ............................

அ) அரிஸ்டாட்டில்
ஆ) மாண்டெஸ்க்யூ
இ) பிளேட்டோ
ஈ) ரூஸோ.

13. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு .........................

அ) 1950
ஆ) 1947
இ) 1952
ஈ) 1945.

14. மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை .........................

அ) 220
ஆ) 230
இ) 250
ஈ) 200.

15. மாநிலங்களின் ஆளுனர்களை நியமிப்பவர் .........................

அ) முதலமைச்சர்
ஆ) குடியரசுத் தலைவர்
இ) உயர் நீதிமன்ற நீதிபதி
ஈ) பிரதமர்.

16. உயர்நீதிமன்ற நீதிபதி .......................... வயது வரை பதவி வகிப்பார்

அ) 62 ஆ) 64

இ) 65 ஈ) 58.

17. மாநகராட்சி மேயரின் பதவிக்காலம் .......................... ஆண்டுகள்

அ) மூன்று ஆ) நான்கு

இ) ஐந்து ஈ) ஆறு.

18. தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் .......................... என அழைக்கப்படுகிறார்.

அ) மேயர் ஆ) சேர்மன்

இ) கவுன்சிலர் ஈ) கமிஷனர்.

19. உலக மக்கள் தொகையில் இந்தியா .......................... இடம் வகிக்கிறது

அ) முதல் ஆ) இரண்டாம்

இ) மூன்றாம் ஈ) நான்காம்.

20. ஆண்களை விட பெண்கள் விகிதம் அதிகம் உள்ள மாநிலம் ..........................

அ) மேற்கு வங்கம் ஆ) பஞ்சாப்

இ) தமிழ்நாடு ஈ) கேரளம்.

II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க : 10 × 1 = 10

21. நில உடைமை அமைப்பு இந்தியாவில் ........................ என அழைக்கப்பட்டது.

22. இனப்பற்றுதான் முதல் .......................... ஒற்றுமைக்குக் காரணம்.

23. ஆளுமையின் வகைப் பாட்டினைக் கூறியவர் ..........................

24. சந்தைப் பொருளாதாரம் தன்னைத் தானே இயக்க வல்லது அல்ல எனக் கூறியவர்..........................

25. இந்திய நாடாளுமன்றத்தின் கீழவை ........................... என அழைக்கப்படுகிறது.

26. சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள மாகாணங்கள் ............................ என அழைக்கப்படுகின்றன.

27. இந்திய பிரதம அமைச்சர் ........................... தலைவர் ஆவார்.

28. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ........................... ஆல் நியமிக்கப்படுகிறார்கள்

29. பஞ்சாயத்து ராச்சிய முறையின் முதலாவது அலகாக ........................... உள்ளது.

30. 'அக்கினிச் சிறகுகள்' ( Wings of Fire ) என்ற புத்தகத்தை எழுதியவர் .......................

III. கீழ்வருவன *சரியா* அல்லது *தவறா* என எழுதுக : 10 × 1 = 10

31. கிரேக்க நகர அரசுகளில் நேரடி மக்களாட்சி பின்பற்றப்பட்டது.

32. பரிணாமக் கோட்பாடு அறிவியல் சார்ந்த கோட்பாடு.

33. யூலோவின் கருத்துப்படி பேரளவு பகுப்பாய்வு தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டது.

34. ஐரோப்பிய யூனியனில் இந்தியா ஒரு உறுப்பு நாடாகும்.

[ Turn over

35. அமெரிக்கா காங்கிரஸின் மேலவை செனட் எனப்படுகிறது.

36. நீதி மறு ஆய்வு அமெரிக்காவின் முக்கியப் பங்களிப்பாகும்.

37. அகாலி தளம் சமய சார்பற்ற அரசியல் கட்சியாகும்.

38. தாலுகா அளவிலான நிர்வாகத் தலைவர் தாசில்தார் ஆவார்.

39. குறிப்பிட்ட எல்லைப் பகுதி குழு ஒரு நியமன அமைப்பாகும்.

40. இந்தியா ஒரு சமதர்ம சமுதாய நாடு ஆகும்.

IV. பொருத்துக: $10 \times 1 = 10$

| | | | |
|---|---|---|---|
| 41. | மக்கள் நல அரசு | a) | அமெரிக்கா |
| 42. | தாய்வழிக் கொள்கை | b) | 30 வயது |
| 43. | உயர் குடியினர் கோட்பாடு | c) | 1992 |
| 44. | கோக்கோ - கோலா | d) | மாநகராட்சி |
| 45. | ஒரு கட்சி முறை | e) | முதலமைச்சர் |
| 46. | நீதி மறு ஆய்வு | f) | நலப்பணிகள் |
| 47. | மாநிலங்களவை உறுப்பினர் | g) | பன்னாட்டு நிறுவனம் ( **Multinational corporation)** |
| 48. | அரசமைப்பு விதி 163 | h) | சீனா |
| 49. | மதுரை | i) | ஜென்க்ஸ் |
| 50. | 74 - வது திருத்தச் சட்டம் | j) | பரிட்டோ. |

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 3 = 30 )

*குறிப்பு :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக.

51. நகர அரசினை வரையறு.

52. அரசின் தோற்றத்தை விளக்கும் கொள்கைகள் யாவை ?

53. 'புதிய அரசியல் அறிவியல்' என்றால் என்ன ?

54. அரசியல் அறிவியல், தொழில் ரீதியான இயல் என்ற நிலையைப் பெற ஆதரவான பணிசார் குழுமங்கள் யாவை ?

55. மக்களாட்சி மற்றும் உயர் குடியாட்சிக் கோட்பாடுகளின் அடிப்படை முரண்பாடுகள் யாவை ?

56. 'செய்தி தொடர்பு தொழில் நுட்பத்தை' விளக்குக.

57. 'வெளி இறையாண்மை' என்றால் என்ன ?

58. ஒற்றை ஆட்சியை விளக்குக.

59. 'நீதி மறு ஆய்வு' - விளக்குக.

60. மக்களவைத் தலைவரின் பணிகள் யாவை ?

61. உயர் நீதிமன்ற நீதிபதி நியமத்திற்கு அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள் யாவை ?

62. 'நகர எல்லைப் பகுதி குழு' - விளக்குக.

63. இந்திய விவசாயக் கொள்கையை விளக்குக.

64. 'நவீன இந்தியாவின் சிற்பியாக நேரு கருதப்படுகிறார்' - விளக்குக.

65. 'காந்தியக் கொள்கைகளை' விளக்குக.

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 6 × 10 = 60 )

*குறிப்பு :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவுக்கும் 100 சொற்களுக்குள் விடையளி.

66. நிலப்பிரபுத்துவ அரசின் எழுச்சியை ஆய்வு செய்க.

[ Turn over

67. சர்ஹென்றி மெனின் கொள்கையை விளக்குக.

68. ஆளுமை என்றால் என்ன ?

69. ஓரவை மற்றும் ஈரவை முறையின் வேறுபாடுகளை விளக்குக.

70. நீதி மறு ஆய்வின் நன்மை, தீமைகளை விவரி.

71. மக்களவையின் அமைப்பு பற்றி விவரி.

72. தலைமைச் செயலரின் பிரதான பணிகள் யாவை ?

73. 'இராணுவ கூட வாரியம்' ( Contonment board ) பற்றி விவரி.

74. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களை விவரி.

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

*குறிப்பு :* i) எல்லா வினாக்களுக்கும் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) எல்லா வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடையளி.

75. அரசின் பரிணாம வளர்ச்சியை அலசுக.

*அல்லது*

ஸ்ஹாப், லாக் மற்றும் ரூஸோவின் சமுதாய ஒப்பந்தக் கொள்கையின் கருத்துக்களை விளக்குக.

76. பாராளுமன்ற அரசாங்க முறையின் அம்சங்களை விவரி.

*அல்லது*

இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் யாவை' ?

77. முதலமைச்சரின் பங்கு, பணிகளை விளக்குக.

*அல்லது*

கிராமப் பஞ்சாயத்தின் கட்டாய மற்றும் தன் விருப்பப் பணிகள் பற்றி கட்டுரை வரைக.